# இ-இன்வொய்ஸ் 2024 ஆகஸ்டு 1 முதல் அமலுக்கு வருகிறது




நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் முயற்சியாக இ-இன்வொய்ஸ் (e-invois) 2024 ஆகஸ்டு 1ஆம் தேதி தொடக்கம் கட்டம்கட்டமாக அமல்படுத்தப்படுகிறது. இந்தப் புதிய திட்டம் மலேசியாவில் வரி நிர்வாகத்தை செம்மைப்படுத்தி உயர்த்தும்.

மக்கள் ஓசை நாளிதழுடன் மலேசிய உள்நாட்டு வருமான வாரிய (LHDNM) தலைமை நிர்வாக அதிகாரி டத்தோ டாக்டர் அபு தாரிக் ஜமாலுடின், விற்பனையாளர் - வாங்குவோர் இடையிலான பரிவர்த்தனைகளும் டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறையை இ-இன்வொய்ஸ் கொண்டிருக்கும் என்று விளக்கம் அளித்தார்.

இ-இன்வொய்ஸ் பயன்படுத்துவதன் வழி காகித ஆவணங்கள், PDF, JPEG, DOC போன்ற வழக்கமான மின்னியல் பயன்பாடுகள் இனிமேல் இருக்காது.

இ-இன்வொய்ஸ் விற்பனையாளர் - வாங்குவோர், பொருட்களின் விவரங்கள், அளவு, வரியில்லாத விலை, வரி உள்ளிட்ட ஒட்டுமொத்த பரிவர்த்தனை ஆகியவை அடங்கிய முக்கிய விவரங்களை முழுமையாகக் கொண்டிருக்கும் பாரம்பரிய நடைமுறையில் இருந்த அனைத்து விவரங்களும் இந்த இ-இன்வொய்ஸில் இருக்கும் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.




இ-இன்வொய்ஸ் அமலாக்கம் உண்மையான நேரத்தில் (real-time) சரிபார்த்து பரிவர்த்தனைகளை வைத்திருப்பதற்கு வகை செய்கிறது. அதேசமயம் கீழ்க் குறிப்பிட்ட அம்சங்களை உள்ளடக்கிய பல்வேறு பரிவர்த்தனைகளையும் முழுமைப்படுத்தும்:

- வணிகத்திற்கு வணிகம் (Perniagaan - Ke - Perniagaan (B2B) (உதாரணமாக: ஓர் இளநீர் வியாபாரி இன்னோர் இளநீர் வியாபாரியிடமிருந்து இளநீர் வாங்குவது.)
- வியாபாரியிடமிருந்து பயனீட்டாளருக்கு விற்பனை (Perniagaan - ke - Penguna (B2C) (உதாரணமாக: இளநீர் வியாபாரி வாடிக்கையாளரிடம் விற்பனை செய்வது.
- வியாபாரியிடமிருந்து அரசாங்கத்திற்கு (Perniagaan - ke - Kerajaan (B2G) (உதாரணமாக: அரசாங்கத்திடம் விற்பனை செய்வது)

### இ-இன்வொய்ஸ் நன்மைகள்

இ-இன்வொய்ஸ் அமலாக்கம் திறனை அதிகரித்து வணிகச் செயல் பாடுகளைச் சுமுகமாக்கி மேம்படுத்தும். வரி மதிப்பீட்டு ஆக்கப்பூர்வ மாக இருக்கும். இ-இன்வொய்ஸ் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள்:

1. தவறுகள், கையால் எழுதும் மேனுவல் நடைமுறையைக் குறைத்து விடும்.
2. கணக்கறிக்கை சமர்ப்பிப்பை எளிதாக்கும்
3. செயல்பாடு திறனை மேம்படுத்தும்
4. வரி, நிதி அறிக்கையை டிஜிட்டல் மயமாக்கும்.

### ஒட்டுமொத்த பார்வை

பாரம்பரிய நடைமுறையில் இருந்து இ-இன்வொய்சுக்கு எளிதான முறையில் மாறுவதற்கு, வரி செலுத்துவோர் HASIL எனப்படும் மலேசிய உள்நாட்டு வருமான வாரியத்திற்கு இ-இன்வொய்ஸ் அனுப்புவதற்கு மிகப் பொருத்தமான வழிமுறையைத் தேர்வு செய்யலாம் என்று டத்தோ டாக்டர் அபு தாரிக் ஜமாலுடின் தெரிவித்தார்.

இ-இன்வொய்ஸ் அனுப்பும் நோக்கத்திற்கு HASIL இரண்டு வகையான வழிமுறைகளைத் தயார் செய்திருக்கிறது. வணிகத்தின் தேவை அடிப்படையில் பொருத்தமான வழிமுறையை வரி செலுத்துவோர் பயன்படுத்தலாம்.

விவரம் வருமாறு:

1. Portal MyInvois

- LHDNM இதனை உருவாக்கியிருக்கிறது
- கட்டணம் ஏதுமின்றி வரி செலுத்துவோர் இலவசமாக இதனைப் பயன்படுத்தலாம்.
- Application Programming Interface (API) இணைப்பு தயாராகாத நிலையில் இ-இன்வொய்ஸ் வெளியிடுவதற்கு வரி செலுத்துவோர் Portal MyInvois இணைப்பைப் பயன்படுத்தலாம்.

2. Application Programming Interface (API)

- வரி செலுத்தும் சிஸ்டம் மேலும் மை இன்வொய்ஸ் (Sistem MyInvois) இடையில் தரவுகளை நேரடியாக அனுப்பும் ஒரு செட் கோட் (Code) முறைதான் API. நடப்பில் இருக்கும் சிஸ்டத்தில் ஒருங்கிணைப்பதற்கு
- தொழில்நுட்பத்தில் தொடக்க முதலீடு தேவை
- மிகப்பெரிய வணிக பரிவர்த்தனை அல்லது பெரும் தொகையில் வரி செலுத்துவதற்கு API முறை மிகவும் பொருத்தமாகும்.




### அமலாக்க கால அவகாச வழிகாட்டி

இ-இன்வொய்ஸ் அமலாக்க அவகாச வழிகாட்டி கீழ்க்குறிப்பிட்டவாறு செயல்படுத்தப்படுகிறது:-

### மை இன்வொய்ஸ் போர்ட்டல்

மலேசிய உள்நாட்டு வருமான வாரியத்திற்கு (HASIL) இ-இன்வொய்ஸ் வெளியிட்டு அனுப்புவதற்கு கீழ்க்குறிப்பிட்ட 2 வழிமுறைகள் Portal MyInvois (மை இன்வொய்ஸ் போர்ட்டல்) சிஸ்டத்தைப் பயன்படுத்தலாம்.

- சொந்த சிஸ்டத்தைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் Integrasi Application Programming Interface (API) முறை;
- https://mytax.hasil.gov.my என்ற அகப்பக்கத்தில் இருந்து Portal MyInvois போர்ட்டலை இலவசமாகப் பயன்படுத்தலாம்.

இ-இன்வொய்ஸ் அமலாக்கம், போர்ட்டல் மைஇன்வொய்ஸ் தொடர்பில் மேலதிகத் தகவல் பெற விரும்புவோர் கீழ்க்குறிப்பிட்டவற்றில் பெறலாம்.

- 03-86828000 என்ற எண்ணில் இ-இன்வொய்ஸ் முகப்பிடத்தை அழைக்கலாம் (24 மணி நேரம்)
- MyInvois Live Chat
- இ-இன்வொய்ஸ் பற்றிய பொதுத்தகவல் பெறுவதற்கு Myinvois@hasil.gov.my எனும் மின் அஞ்சல்
- மைஇன்வொய்ஸ் வாடிக்கையாளர் கருத்துச் சொல்லும் பாரங்களை https://feedback.myinvois.hasil.gov.my அகப்பக்கத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

## Pelaksanaan e-Invois akan dilaksana bermula 1 Ogos 2024

Dalam usaha menyokong pertumbuhan ekonomi negara, e-Invois bakal dilaksanakan secara berperingkat bermula 1 Ogos 2024 untuk meningkatkan kecekapan pentadbiran cukai di Malaysia.

YBhg. Datuk Dr. Abu Tariq Jamaluddin, Ketua Pegawai Eksekutif HASiL dalam Sesi Temu bual Eksklusif Bersama Dengan Makkal Osai menerangkan bahawa, e-Invois merupakan representasi dalam bentuk digital untuk segala trasaksi yang dijalankan antara penjual dan pembeli. Dengan penggunaan e-Invois ini, tiada lagi penggunaan dokumen kertas atau elektronik seperti kebiasaan dalam format PDF, JPEG, DOC dan sebagainya.

Menurut beliau, e-Invois akan dilengkapi dengan maklumat penting yang sama seperti dokumen tradisional seperti butiran penjual dan pembeli, keterangan item, kuantiti, harga tanpa cukai dan jumlah keseluruhan termasuk cukai.




Pelaksanaan e-Invois ini membolehkan pengesahan dan penyimpanan transaksi secara *'real-time'* serta memenuhi pelbagai jenis transaksi termasuklah:

- Perniagaan-ke-perniagaan (B2B)
- Perniagaan-ke-Pengguna (B2C)
- Perniagaan-ke-Kerajaan (B2G)




## Manfaat e-Invois

Pelaksanaan e-Invois ini akan meningkatkan kecekapan, melancarkan operasi perniagaan serta meningkatkan tahap pematuhan cukai.  Antara manfaat e-Invois adalah:

a. Mengurangkan proses manual dan kesilapan
b. Memudahkan pengemukaan borang nyata
c. Meningkatkan kecekapan operasi
d. Mendigitalkan pelaporan percukaian dan kewangan

## Gambaran Keseluruhan




Bagi melancarkan peralihan operasi secara tradisional kepada sistem e-Invois, pembayar cukai boleh memilih mekanisme paling sesuai untuk menghantar e-Invois kepada pihak Lembaga Hasil Dalam Negeri Malaysia (HASiL).

HASiL telah menyediakan dua (2) pilihan mekanisme bagi tujuan penghantaran e-Invois. Pembayar cukai boleh memilih mekanisme yang paling sesuai berdasarkan keperluan perniagaan seperti berikut:

1. **Portal MyInvois**
    - Portal yang dihoskan oleh LHDNM
    - Boleh diakses oleh semua pembayar cukai tanpa sebarang kos
    - Juga boleh diakses oleh pembayar cukai yang perlu mengeluarkan e-Invois ketika mana sambungan *Application Programming Interface* (API) tidak tersedia.

**2.** ***Application Programming Interface*** **(API)**

- API adalah satu set kod pengaturcaraan yang membolehkan penghantaran data secara langsung antara sistem pembayar cukai dan Sistem MyInvois
- Memerlukan pelaburan awal dalam teknologi dan pelarasan kepada sistem sedia ada
- Sesuai untuk pembayar cukai besar atau perniagaan dengan jumlah transaksi yang besar

## Garis Masa Pelaksanaan

Garis masa pelaksanaan e-Invois bagi adalah seperti berikut:



## Portal MyInvois

Portal MyInvois kini boleh diakses bagi tujuan pengeluaran dan penghantaran e-Invois kepada HASiL melalui dua (2) kaedah berikut:

- Integrasi *Application Programming Interface* (API) (bagi syarikat yang mempunyai sistem perisian sendiri); dan
- Portal MyInvois yang boleh diakses secara percuma di https://mytax.hasil.gov.my

Sebarang pertanyaan lanjut berhubung pelaksanaan e-Invois dan Portal MyInvois boleh disalurkan melalui:

- Meja Bantuan e-Invois HASiL di talian 03-8682 8000 (talian 24 jam);
- MyInvois Live Chat;
- E-mel myinvois@hasil.gov.my bagi pertanyaan umum e-Invois; dan
- Borang Maklum Balas Pelanggan MyInvois di pautan https://feedback.myinvois.hasil.gov.my